கோவிலூர் ஆதீன வேதாந்த திருமடம்

குன்றக்குடி பெரியபெருமாள்

பாரத நாட்டில் சிவ பரம்பொருள் எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் திருத்தலங்கள், ஆயிரத்தெட்டு எனப் பொதுவாக ஒரு கணிப்புக் கூறுவதுண்டு. ஆனால், அவைகளைத் திட்டமாக இன்னவைதாம் எனக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எனினும் தென்னாட்டில் தான் சிவ வழிபாடும், சிவத் திருத்தலங்களும் மிகுதி! சிவத்தலங்களில் தேவாரம் பெற்ற திருத்தலங்கள், சிறப்பிற்குரியவையாகப் போற்றப் பெறுகின்றன. ஞானச் செல்வர் திரு ஞானசம்பந்தப் பெருமான், அருட் செல்வர் திருநாவுக்கரசு சுவாமிகள், இறைச் செல்வர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய அருளாளர்கள் மூவரால் பாடியருளி வழிபட்ட சிவத் திருத்தலங்கள் 274. இவை பாடல் பெற்ற திருத்தலங்கள் எனப் புகழ்ந்து பாராட்டுப் பெறுபவை!

பாடல் பெற்ற தலங்களுக்கு அடுத்த நிலையில், சிறப்புப் பெற்றுத் திகழ்பவை புராணம் பெற்ற திருத்தலங்கள் ஆகும், பல சிவத் திருத்தலங்களுக்கு மூவர் பாடல்கள் இல்லாவிடினும், புராணங்கள் உள்ளன. அந்தத் திருத்தலங்களில் வாழ்ந்த வடமொழி வாணர்கள், தல புராணங்களை இயற்றி அருளினர். பின்னர் அவற்றைத் தமிழ்ப் புலமை கொண்ட சான்றோர், தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் மொழி மாற்றம் செய்து பாடித் தந்தனர்.

புராணம் பாடிய புலவர்களுள் வெகு பெருமையும், மிகு புகழும் கொண்டவர் பேரறிஞர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார்! தமிழ் மொழியில் அதிகமான புராணங்களைப் பாடியவர் இப் பெருமகனாரே ஆவார்! 'புராணம் பாடும் புலவன் என ஆன்றோர்களால் அக மகிழ்ந்து போற்றப் பெற்ற இப் பேரறிஞர், கோவிலூர் ஆதீன வேதாந்த திருமடத்தின் மூன்றாவது பீடாதிபதியாக எழுந்தருளிய தவத்திரு சிதம்பர

ஞானதேசிகரின் காலத்தில் 'கோவிலூர்ப் புராணம்' இயற்றி வழங்கி, அரங்கேற்றினார்.

வேதாந்தத் திருமடத்தை நிறுவிய பெருமானும், முதல் குருநாதருமாகிய 'கோவிலூர் ஆண்டவர்' எனப் போற்றப் பெற்ற ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர், கோவிலூர் தவத் திருக் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணியாற்றி விரிவாக்கம் செய்தருளினார். அப்பெருமானுக்குப் பின்னர் ஆதீனத் தலைவராக ஸ்ரீ அருணாசல தேசிகர் பட்டமேற்றார். அவருக்குப் பின்னர் ஞானாசிரியராக மடாதிபதியாக, வீற்றிருந்த தவத்திரு சிதம்பர ஞான தேசிகரைக் கோவிலூர்ப் புராணத்தில் குறிப்பிட்டுப் போற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை,

"நாலாய மறைமுடிவின் பொருள் விளங்க எடுத்து
நல்மாணவர்க் கருளித் தன்மயமாக் கிடுவோன்"

எனப் பாடினார்.

கோவிலூர் மடாலயத்தில் அருளாட்சி செய்த அருளாளர்கள் அனைவருமே, நான்கு வேதங்களிலும் ஆழ்ந்த புலமை உடையவர்களாக விளங்கினர். வடமொழியிலுள்ள நான்கு வேதங்களையும், வேதாந்த சித்தாந்த உண்மைகளையும், வடமொழிப் பயிற்சி இல்லாத தமிழ்ப் பெருமக்களும் அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கம் பெற்ற கோவிலூர் மடாலயத்தில், நாளும் கலயத்தில் கஞ்சி ஏந்திக் கொண்டு வந்த மாணாக்கர் பலர், வேதாந்தம் பயின்றனரென்ற செய்தி படித்தவர்களுடைய ஆர்வத்தையும், படிப்பித்தவர்களுடைய நோக்கத்தையும் புலப் படுத்துவதாக உள்ளது! வேதம் பயில்வதற்குச் சாதியோ, இனமோ, மொழியோ தடையாக இருப்பதில்லை என்பதை அடி நாதமாகக் கொண்டே, அனைவருக்கும் வேதாந்த சாத்திரங்களை 'நாநாஜீவ வாதக் கட்டளை' முதல் 'ஞானாவாசிட்டம்' வரை 16 வகை நூல்களைப் பாடத்திட்டமாகக் கொண்டு பயில்வித்துக் கோவிலூர் மடாலயம் 'வேதாந்தத் திருமடம்' என்னும் வித்தகச் சிறப்பைப் பெற்றது.

24-3

வேதம், உபநிடதம் முதலான வைதீகச் சமய நூல்களையெல்லாம் சிக்கறத் தெளிந்து, அத்துவித உண்மைகளைத் தமிழறிந்த அனைவருக்கும் அற்புதமாக உணர்த்தி, நாளும் பொழுதும் நான்கு மறைகளையும் கற்றுத் தெளியும் நன் மாணாக்கர் திருக்கூட்டத்தை உருவாக்கித் திருமடம் நிறுவிய பெருமான் 'கோவிலூர் ஆண்டவர்' என அழைக்கப் பெற்ற, ஆதீன முதல் ஞானாசிரியர் தவத்திரு முத்துராமலிங்க ஞானதேசிகரின் வாழ்க்கை–திருவருள் மிளிரும் அருள் வரலாறு!

'தனவணிகர்' என்றும், 'நகரத்தார்' என்றும் அழைக்கப் பெறும் புகழார்ந்த சமூகத்தைச் சார்ந்த மெய்யப்ப செட்டியார்–வள்ளியம்மை ஆச்சியின் இல்லறப் பயனாய், காரைக்குடி நகரில் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய முத்துராமலிங்கம், பால பருவத்தை அடைந்த போது, எந்நேரமும் இறை வழிபாட்டில் நாட்டமும், ஞான நூல்களைத்தேடிக் கற்பதில் தேட்டமும் கொண்டு திகழ்வதைக் கண்ட தாயும், தந்தையும் வியந்து போயினர்.

ஒருமுறை இராமேஸ்வரம் செல்வதற்காக வடநாட்டிலிருந்து வருகை தந்த யோகி ஒருவரைத் தரிசிக்கச் சென்ற பெற்றோருடன், முத்துராமலிங்கமும் சென்று வணங்கியபோது, "உலகத்திற்கு உபதேசிக்கப் பிறந்த பெருமகனே! ஆண்டவரே! உங்களைக் கண்டதில் பேரானந்தம் கொள்கிறோம்!" என யோகி உவந்து கூறி, கரம் கூப்பினார்! அந் நிகழ்ச்சிக்குப் பின்னர், 'முத்துராமலிங்கம்' அனைவராலும் 'ஆண்டவர்' என்றே அழைக்கப் பெற்றார்!

தஞ்சாவூர் மாவட்டம் சிக்கல் என்னும் ஊரில், மெய்யப்ப செட்டியார் தொழில் தொடங்கி நடத்தி வந்ததால், குடும்பம் காரைக்குடியிலிருந்து சிக்கலுக்குச் செல்ல நேர்ந்தது. முத்துராமலிங்கம், சிக்கலுக்கு அருகேயுள்ள பொருள்வைத்த சேரியில் 'உகந்தலிங்க சுவாமிகள்' என்னும் அருளாளரும், அருமறைகள் உணர்ந்தவருமாகிய ஒரு ஞானாசிரியர் வாழ்ந்து வருவதை அறிந்து, அப் பெருமானிடம் சென்று, வேதாந்த சாத்திரங்கள் பதினாறையும் கற்றார். பதினாறாவது நூல் வாசிட்டம்.

வாசிட்டம் கற்று நிறைவு செய்தால், வேதாந்தத்தை முழுமையாகக் கற்று, அத் துறையில் பட்ட மேற்படிப்புப் படித்தமைக்கு ஒரு சான்று. எனவே வாசிட்டம் நிறைவு செய்ததும், மாணாக்கர் தன் குருவுக்கு ஆராதனைசெய்து, காணிக்கை வழங்குவது மரபு. 'வாசிட்ட சமாப்தி' என்னும் அந் நிகழ்ச்சியைச் செய்வதற்கு 'ஆண்டவர்' என்னும் முத்து ராமலிங்கம் தந்தையாரிடம் பணம் கேட்டார். தந்தையார் ஒரு மறுமொழியும் கூறாது, பேசாது இருந்தார்.

"அப்பச்சி! நான் திரும்பத் திரும்பக் கேட்க, ஒன்றும் பேசாது இருக்கிறீர்களே! உங்கள் காது செவிடாகிப் போனதா?" என்றார் ஆண்டவர்.

அந்த நொடியிலேயே, தந்தை மெய்யப்ப செட்டியாரின் செவிகள் கேட்கும் ஆற்றலை இழந்தன! ஓடோடி உகந்தலிங்க சுவாமிகளிடம் சென்ற செட்டியார், நடந்ததைக் தெரிவிக்க, ஆண்டவரை சுவாமிகள் அழைத்து, "உன் பிதாவுக்கு உண்டான வருத்தம் நீங்க, திருநீறு தருக" என்றார். தந்தைக்குத் திருநீறு வழங்கியதும், தந்தையின் மூடிய காதுகள் திறந்தன! பயந்தும், பணிந்தும் வாசிட்ட சமாப்தி நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்தி வைத்தார் தந்தை மெய்யப்ப செட்டியார்.

உகந்தலிங்க சுவாமிகளின் துணைவியார், வளர்ப்பதற்கு மயில் குஞ்சுகள் வேண்டுமென்றும், காரைக்குடிப் பகுதியிலுள்ள காடுகளில் மயில்கள் மிகுதியாக உள்ளனவென்றும், ஆண்டவரிடம் கூறினார். குருவின் துணைவியார் விருப்பத்தை நிறைவேற்ற, காரைக்குடி வந்த ஆண்டவர், அருகிலுள்ள காட்டுக்கு (இன்றைய கோவிலூர்ப் பகுதி) மயில் குஞ்சுகளைப் பிடித்து வரச் சென்றார்.

திருநெல்லை நாயகி உடனாய கொற்றவாள் ஈசுவரர் திருக்கோவில், காட்டுக்குள் பழுதடைந்த நிலையில் இருப்பதைக் கண்ணுற்ற ஆண்டவர், பெருமானை வழிபட்டுப் பெரும் பற்றுக் கொண்டார். சிதிலமடைந்திருந்த கோவிலைக் கல் திருப்பணியாகச் சீரிய வகையில் செப்பனிடச் சித்தத்தில் உறுதி பூண்டார். கொற்றவாள் ஈசுவரரிடம், 'நீ என்றும் எனை விடா

நிலையும், உனை என்றும் நான் விடா நெறியும் உவந்தருள வேண்டும்' என வேண்டினார். வேண்டுதல் நிகழ்ந்தது! ஆண்டவரின் விருப்பம் தழைத்துக் கிளைக்க, நகரத்தார் பெருமக்கள் வேண்டியவை அளித்தனர்! வித்தகத் திருக்கோயிலும், வேதாந்த நித்தியப் படிப்புக்கொரு திருமடமும் அந்தக் காட்டுப் பகுதியில் கவினுற எழுந்தன!

கோவிலூர்த் திருமடம் 1818 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் திருமடத்தில் முதல் பீடாதிபதியாக எழுந்தருளியிருந்த கோவிலூர் ஆண்டவர் என்கிற தவத்திரு முத்துராமலிங்க தேசிக சுவாமிகள், நகரத்தார் பெருமக்களை அறப்பணிகளில் ஆற்றுப்படுத்திய அருளாளர் ஆவார்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளை, வைணவ தத்துவ நெறிகளை வளர்க்கத் தமிழகத்தில் பல திருமடங்கள் உருவாக்கம் கொண்டுள்ளன. ஆனால் வேதாந்தக் கொள்கைக்கு விளை நிலமாக வடிவாக்கம் கொண்டது கோவிலூர் திருமடம். வேதாந்தக் கருத்துகள் அறிஞர்களால் எளிமைப்படுத்தப் பெற்று, கற்றார்க்கும், மற்றார்க்கும் உணர்த்திக் கடைத்தேற்றம் செய்வதற்காகத் தோன்றிய மடமே கோவிலூர் திருமடம்.

கோவிலூர் ஆண்டவர், திருமடத்தை நிருவகிக்க ஓர் ஆதீனத்தையும் நிறுவினார். வடமொழிப் பாண்டித்தியமும், தமிழ்மொழிப் புலமையும் கொண்டிருந்த ஆண்டவர் பெருமான் செந்தமிழ்ச் செய்யும் நூல்கள் பலவற்றை இயற்றி அருளியுள்ளார். ஆண்டவர் முத்துராமலிங்க தேசிக சுவாமிகளின் அறிவுரையாலும், தூண்டுதலாலுமே நகரத்தார் பெருமக்கள், பாடல் பெற்ற திருக்கோயில்களுக்கெல்லாம் திருப்பணி செய்யத் தொடங்கினர். சத்திரம், பாடசாலை, பசுமடம், நந்தவனம் முதலிய அறச் செயல்களில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டனர்.

ஆண்டவர் பெருமானின் குருநாதர் உகந்தலிங்க சுவாமிகள், ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளின் சிருங்கேரிப் பரம்பரை மரபு வழி

நின்றதால், கோவிலூர் ஆதீனத்தார் சிருங்கேரி மடத்தைத் தங்கள் குரு பீடமாகக் கருதி வருகின்றனர். கோவிலூரின் மூன்றாவது பீடாதிபதியாக வீற்றிருந்த சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் காலத்தில், சிருங்கேரியில் ஒரு மண்டபம் உருவாக்க, கோவிலூரிலிருந்து நிதி சேகரித்து அனுப்பப் பெற்றது. வெள்ளிப் பாத்திரங்கள், வெள்ளிக் கேடகங்கள் ஆகியவை செய்து வழங்கப் பெற்றன. கோவிலூரில் நடைபெறும் திருக்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழாவிற்கெல்லாம் சிருங்கேரி பீடாதிபதிகள் வருகை தருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

'திருக்களர் ஆண்டவர்' என அழைக்கப் பெற்ற தவத்திரு வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் கோவிலூர் மடாலயத்திற்கும், திருக்கோயிலுக்கும் ஆற்றிய திருப்பணிகள் நினைக்கத் தக்கவை. ஆதீன ஐந்தாவது பீடாதிபதியாக எழுந்தருளிய சுவாமிகள் கயிலாசக் கொட்டகை, பிரம்ம சபை, குருபூசைக் கட்டு, பூ மண்டபம் என மடாலயத்தை வனப்போடு திகழவைத்து, திருக்கோயிலைக் கலைச் செறிவுடைய கடவுளர் கோட்டமாக்கித் திருக்குளத்தை எழிலார்ந்த உருவாக்கமாக ஒளிர வைத்து, 1908 ம் ஆண்டு திருக்குட நீராட்டு விழா எடுத்து உவந்தார்.

ஆறாவது பட்டமாக எழுந்தருளிய தவத்திரு அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள், வடமொழியிலுள்ள 18 புராணங்களையும் தமிழில் மொழிபெயர்த்து அருளினார். ஏழாவது ஆதீனகர்த்தர் தவத்திரு மகாதேவ ஞான தேசிகர் காலத்தில், திருமடத்தில் தங்கி, பாடம் கேட்ட அடியார்கள் அதிகமானவர்கள். வேறு எந்தக் காலத்திலும், இத்தகைய மிகுதியான மாணாக்கர்களைத் திருமடம் கண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கோவிலூர் திருக்கோயில் திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழாவை நினைவில்கொண்டு, நகரத்தார் பெருமக்களின் பேராதரவுடன், 1978 ஆம் ஆண்டு திருக்கோவிலைப் பழுது பார்த்து நன்னீராட்டு விழாவைப் பொலிவோடும் புகழோடும் நடத்திய ஒன்பதாவது ஆதீனகர்த்தர் தவத்திரு இராமநாத ஞான தேசிக சுவாமிகள்,

ஆண்டவர் மன்றம் உருவாக்கி, நிருவாகத்தை மன்றத்திடம் ஒப்படைத்தார். எழுத்தாளர் பி.ஸ்ரீ, கம்பனடிப்பொடி சா. கணேசன், தமிழ்க்கடல் ராய. சொ, சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா போன்ற பல அறிஞர்களோடு இளமை முதலாகவே நெருக்கம் கொண்டிருந்தார். பதினோறாவது பீடாதிபதி தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிகர், அறிஞர்களையெல்லாம் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் அழைத்து, திருமடத்தில் 'சிந்தனைப் பூங்கா' என்றொரு சீரிய நிகழ்ச்சியை நடத்திப் பெருமை பூண்டார்.

கோவிலூர் ஆதீனத் திருமடத்து அருளாட்சியை, 12வது பீடாதிபதியாக எழுந்தருளி, மேற்கொண்டுள்ள தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், சிறப்புகள் பலபெற்ற ஞானச் செல்வராகத் திகழ்ந்து வருகிறார்! திருமடத்து நிறுவனர் கோவிலூர் ஆண்டவர் தவத்திரு முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் மகன் வழி ஆறாவது தலைமுறைப் பேரன் ஆவார் இப் பெருமான்! ஆண்டவரின் மரபு வழியாக, கோவிலூர் ஆதீனத்தின் பீடாதிபதியாகப் பொறுப்பேற்கும் புண்ணிய வாய்ப்புப் பெற்ற முதல்வர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளேயாவார்!

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் கோவிலூர்க் கிளை மடம் என்ற ஒன்றை உருவாக்கிய சுவாமிகள், வடக்கே ரிஷிகேசத்தில், சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆசிரமத்துக்குப் பக்கத்தில் அண்மையில் கிளை மடம் ஒன்றைக் கட்டி முடித்துத் திறந்து வைத்தார்! ஆண்டவர் அருளிய கோவிலூர் திருமடத்தின் திருத்தொண்டு அகிலமெங்கும் பரந்து சிறக்க வேண்டுமென உறுதி பூண்ட சுவாமிகள், அமெரிக்காவில் கிளை மடம் உருவாக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகிறார். நியூயார்க்கிலிருந்து 41 மைல் தொலைவிலுள்ள 'PRINSTON' என்னுமிடத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார். இதன் தொடர்பாக, 77 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் இப்பெருமான், அளப்பரிய ஆர்வத்துடன் அமெரிக்க நாட்டிற்கு அடிக்கடி சென்று வருவது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள், கோவிலூர் ஆதீனப் பொறுப்பை

ஏற்ற அதே நாளில், ஒரு சிறுவர் பள்ளியைத் தொடங்கினார். பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கோவில் சார்ந்த கலைகள் வளர்ச்சியடைந்து, விளக்கமுற வேண்டுமெனும் நோக்கத்தில் திருமுறைக் கல்லூரி, நாதசுர தவில் இசைக் கல்லூரி, வேதாகமப் பாடசாலை, தேர் செய்யும் பயிற்சிக் கூடம், வாகனங்கள் செய்முறைக் களம், திருவாபரணங்கள் செய்முறைப் பட்டறை, சிற்பக் கல்லூரி ஆகிய நிறுவன அமைப்புகளைக் கோவிலூரில் சுவாமிகள் தொடங்கினார்.

கோவிலூர் மடாலயம் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ, இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Indology) என்ற ஆய்வு மையத்தை நிறுவியுள்ளார். "சனாதன தர்ம உலகப் பல்கலை கழகம்" கோவிலூரில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

காரைக்குடியில் பிறந்த நாச்சியப்ப சுவாமிகள், சென்னை 'கலாக்ஷேத்ரா' வில் அருஞ்சேவை புரிந்து, உலகளாவிய புகழ் பெற்ற அன்னை ருக்மணி அருண்டேலின் அன்பிற்குரிய அருமைச் சீடராக விளங்கியவர். அச்சுக் கலையிலும், புகைப்படக் கலையிலும் புகழார்ந்த பெருமை பெற்ற சுவாமிகள், கலாக்ஷேத்ரா நாட்டியக் குழு மேலாளராக உலகம் முழுவதும் பலமுறை பயணம்செய்துள்ளார்.

1995ஆம்ஆண்டு காவி உடுத்தித் துறவு பூண்டு, கோவிலூர் ஆதீனகர்த்தராக எழுந்தருளிய தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், போற்றத்தக்க செயல்களுக்கு மாதம் ஏறத்தாழ பத்து லடசம் செலவு செய்யும் வகையில், ஓர் அறக்கட்டளையை உருவாக்கிப் பத்துக் கோடி ரூபாயை வைப்பு நிதியாக்கியுள்ளார்!

சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு மேற்கே, இரண்டு கல் தொலைவிலுள்ள கோவிலூர் ஆதீன வேதாந்தத் திருமடம், நகரத்தார் பெருமக்களின் குரு பீடம். வேதாந்தத்தைப் பொதுமைப் படுத்திப் புதுமை செய்து, பெருமை கண்டது! அதனால் பெரிதும் புகழ் கைக் கொண்டது!

நன்றி: ஓம் சக்தி; ஆகஸ்ட் 2000

கோவிலூர் மடாலயப் பாட நூல்கள்

வேதாந்த நூல்கள்

முன்னாளில் தென்னகத்தில் வேதாந்தங்களைப் பயின்றவர்கள் அதிக அளவு இருந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் வேதத்தின் வழிநூலான உபநிடதங்களையும் அதன் சாரமான வேதாந்தத்தையும் பயின்று மேன்மைப் பெற்றிருந்தனர். வேதாந்த நூல்கள் பெரும்பாலும் வடமொழியில் இயற்றப்பட்டு இருந்ததால் அவை வடமொழியிலேயே பயிற்றுவிக்கப்பட்டன. இவைகளைப் பயில வடமொழிஅறிவு இன்றியமையாததாயிற்று. எனவே இந்நூல்களைப் பயில்பவர்கள் குறைவாகவே இருந்தனர்.

பிராமணர்களே அதிக அளவில் அத்வைத சித்தாந்த நூல்களைப் பயின்று பாடசாலைகளை அமைத்து அவற்றைப் போதித்து வந்தனர். பிராமணரல்லதார்கள் வேதங்களைப் பயின்று பாடசாலைகளை அமைக்கும் வழக்கம் இல்லை. என்றாலும் பின்னாளில் பிராமணர் அல்லாத வேதாந்த அறிஞர்கள் தமிழகத்தில் பலர் தோன்றினர் அவர்கள் வேதங்களையும் அதன் அங்கங்களையும் பயின்று அதன் பிழிவாக உள்ள வேதாந்தக் கருத்துககளைத் தமிழ்மொழியில் சிறந்த செய்யுள் நடையில் நூலாக இயற்றினர். மேலும் பல வடமொழி கன்னட வேதாந்த நூல்களையும் மொழிபெயர்த்தனர். அதனையொட்டி வேதாந்த மடாலயங்களும் தோன்றலாயின. இவ்வகையில் முதலில் தனிச்சிறப்புடன் தோன்றிய வேதாந்த மடம் கோவிலூர்த் திருமடமாகும்.

வேதாந்தம் என்பது பரந்த கடலைப்போன்றது. சிறந்த தத்துவ, தர்க்க அமைப்புகளைக் கொண்டது. அது சம்பந்தமான எல்லா நூல்களையும் பயின்று அதன் முடிவை அறிவது இயலாதவொன்று . எனவே குறிப்பிடத்தக்க 14 வேதாந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தனர். இவவகையில் கோவிலூர் மடத்தில்14 வேதாந்த சாத்திரங்கள் பயிலப்பட்டு வந்தன. அதையொட்டி தமிழகத்தில் பிற இடங்களில் இருந்த வேதாந்த மடாலயங்களிலும் இந்நூல்களே போதிக்கப்படலாயிற்று.

பதினான்கு வேதாந்த சாத்திரங்களாவன

இதில் 13 வதாக உள்ள கீதைத்திரயம் என்பது 3 நூல்களின் தொகுப்பாகும். எனவே இந்த நூல்களை பதினாறு என்று சொல்வதும் மரபு. பின்னாளில் இதனையொட்டி வேதாந்த நூல்களைப் பதினாறு என்ற எண்ணிக்கையளவில் வகைப்படுத்திக்கூறும் வழக்கமும் வந்தது.

இவைகளைத் தவிர, தோத்திர வடிவமாகச் சொல்லப்பட்ட வேதாந்த நூல்கள் பலவாகும். இவற்றில் குறிப்பிடத்தக்கவை ஸ்ரீமத் தாயுமானவசுவாமிகள் அருளிச் செய்த நூல்களாகும். இனி இந்தப் பதினான்கு வேதாந்த நூல்களின் அமைப்பைக் காணலாம்.

1.நாந ஜீவ வாதக்கட்டளை

வேதாந்தப் பாட வரிசையில் முதல் நூலாகத்திகழும் இந்நூல் ஸ்ரீசேஷாத்திரி சிவனார் என்பவரால் இயற்றப்பட்டதாகும். இந்நூல் நான்கு வேதத்துள் மூன்றாவதாக உள்ள சாமவேதத்தின் ஞானபாதக் கருத்தை விவரித்துக் கூறும் சாந்தோக்கிய உபநிடத்தில் கூறப்பட்டுள்ள "தத்துவமசி" என்ற மகாவாக்கியத்தின் விரிந்த பொருளாக அமைகிறது. இந்நூல் உலக உற்பத்திற்குறிய பலவகையான தத்துவங்களை விரிவாகக் கூறுவதாகும். இது உரை நடையில் அமைந்துள்ளது.

2. கீதாசாரத் தாலாட்டு

இந்நூல் திருவேங்கடநாதர் அருளிச் செய்ததாகும். கீதையின் சாரம் எளிய தமிழில் தாலாட்டுப் பாடல் அமைப்பில் பாடப்பட்டுள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. காப்புச்செய்யுள் ஐவகைப் பொருளும், நான்கு கரணங்களும், மூன்றுவகை குணங்களும் இரண்டு வினைகளும் ஒன்றித் திகைத்து நிற்க பொய்யான மாய இருள் அகல ஞான சுரியனாக அவதரித்த வெண்சங்கேந்திய கண்ணனைக் கருத்துள் வைப்போம் என்று தொடங்குகிறது.

இறுதிப்பாடல் ஆதிமூலபரம்பொருளான திருமால் அர்ச்சுனனுக்கு ஆதிமறைகளின் பொருளை உணர்த்தியதை

இப்பொழுது கூறினோம். இதை விரும்பிக் கற்றுக் கேட்பவர்கள் உலகில் சிறப்புற வாழ்ந்து முத்தி பெறுவர் என்று பலன் கூறுகிறது.

இடையில் உள்ள பாடல்கள்யாவும் தாலாட்டு பாடல் அமைப்பில உள்ளன.

3. சசிவர்ன போதம்

இது ஸ்ரீதத்துவராய சுவாமிகளால் இயற்றப் பெற்ற மோகவதைப் பரணி என்ற நூலின் ஒரு பகுதியாகும். கடவுள் துதியாக 2 பாடலும் நூலாக 110 பாடல்களும் உள்ளன, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மண், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவாக இருக்கின்ற பரம்பொருளுக்கு வணக்கம் செய்து இந்நூல் தொடங்குகின்றது.

வடமொழியில் அமைந்த சூதசங்கிதை முத்தி காண்டத்தின் ஏழாம் அத்தியாயத்தில் சசிவர்னன் என்பவனுடைய கதை பரமேசுவரனால் திருமாலுக்குக் கூறப்பட்டுள்ளது. இதில், குருசேவை மகிமை, பக்தி, முதலியன சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. சசிவர்னன் அடைந்த ஞானப்பேரறிவைக் கூறுவதால் சசிவர்ன போதம் எனப்பெயர் பெற்றது. இதற்குத் திருப்புவனம் வேதாந்தமடம் ஸ்ரீகாசிகானந்த சுவாமிகளால், பதார்த்த பாஸ்கரன், என்ற உரைநூல் வரையப் பெற்றுள்ளது. மேலும் இதற்குப் பல உரை நூல்கள் உள்ளன. விருத்தாசலப் புராணத்திலும் சசிவர்னன் கதை ஒரு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது இங்கு எண்ணத்தக்கதாகும்.

4. மஹாராஜா துறவு

இந்நூல் விருத்தாச்சலத்தில் எழுந்தருளியிருந்த குமாரதேவ சுவாமிகளால் அருளப்பெற்றதாகும். இது ஒரு நெடுங்கதைபோல அமைந்துள்ளது. விருத்தாசலத்தில் கோயில் கொண்டுள்ள பெரியநாயகி அம்பிகையே குமாரதேவரின் நாவில் வீற்றிருந்து இதனை அருளிச்செய்தாள் என்பர். இதில் பாயிரமாக ஒன்பது பாடல்களும் நூலாக 116 பாடல்களும் ஆக 125 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கோவை, பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்கசாமி சமாதி நிலையத்தில், இந்நூலில் அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தின் முதற்பாடல் தினமும் வழிபாட்டின் போது பாடப்படுகின்றது.

5. வைராக்கிய சதகம்

இந்நூல் மேற்சொன்ன குமாரதேவரின் குருபிரானான பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப்பெற்றதாகும். இதன் முதற்பகுதி சாத்திர வடிவாகவும், பிற்பகுதி தோத்திரவடிவாகவும் உள்ளது. பின்பகுதியான 50 பாடல்களும் தத்துவக் கருத்துகளுடன் தில்லைநடராஜப் பெருமானைப் போற்றி வணங்குவதாக அமைந்துள்ளது.

6. வைராக்கிய தீபம்

இதுவும் பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப்பட்டதேயாகும். பாயிரம் உட்பட 101 செய்யுள்களைக் கொண்டதாகும்.

7. இலக்ஷணாவிருத்தி

இது ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளால் வடமொழியில் இயற்றப்பட்டதாகும். இதற்கு பிரஹ்ம நாமாவளி என்றும் பெயர் வழங்குகின்றது. இதில் பரம்பொருளுக்கு உரிய 108 நாமங்கள் சொல்லப்பட்டு அதன் பொருளை விவரிப்பதுபோல் பாடல்கள் அமைந்துள்ளன. இந்த நாமங்கள் எந்த ஒரு கடவுளின் தன்மையையும் பெயரையும் குறிக்காமல் அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாக விளங்கும் பிரம்மத்தையே விளக்கி நிற்கின்றது. பிரமத்தின் (லட்சணத்தை) விரிவாக விளக்கிக் கூறுவதால் "லட்சணா விருத்தி" எனப்பெற்றது. இதில் பாயிரம் உள்பட 115 செய்யுள்கள் உள்ளன. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீகருணாநிதி என்னும் சிதம்பரஞானதேசிகராவார். தமிழ்மொழி பெயர்ப்பில் பாயிரமாக 6 பாடல்களும் முதல்பகுதியாகிய நித்யசன யுக்தி என்னும் பகுதியில் 72 பாடல்களும் இரண்டாம் பகுதியான சமாதி யுக்தியில் 36 பாடல்களும் வேண்டுகோளாக ஒரு பாடலும் ஆக 115 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன.

8. வேதாந்த சூடாமணி

இதன்மூலம் கன்னடமொழியில் ஸ்ரீநிஜகுணயோகீசுவரரால் இயற்றப்பட்ட விவேக சிந்தாமணி எனும் நூலாகும். இந்நூலின் வேதாந்த பரிச்சேதம் எனும் பகுதி நல்லற்றூர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று வேதாந்த சூடாமணி என்று பெயரிடப்பட்டுள்ளது. இது பாயிரம் உட்பட 184 செய்யுள்களைக் கொண்டதாகும்.

9. கைவல்ய நவனீதம்

தமிழில் அமைந்த வேதாந்த நூல்களில் தலையானது கைவல்ய நவனீதமேயாகும். வியாச மகரிஷி ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் உள்ள இணைப்பை விளக்கியும். உபநிஷதங்களைப் பயில்வோருக்கு உண்டாகும் ஐயங்களை நீக்கும் பொருட்டும். உபநிஷதங்களின் சாரமாக 555 சூத்திரங்கள் அடங்கிய ஒரு நூலை இயற்றினார். அந்த நூலே "பிரம்ம சூத்திரம்" என்பதாகும். இந்நூலுக்கு நீலகண்டர், ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர் முதலிய அனேகர் உரையெழுதியுள்ளனர். வடமொழியில் அமைந்த இந்த உரைநூல்களுக்குப் பாஷ்யம் என்பது பெயர். இந்த "பிரம்ம சூத்திரத்தினை நன்னிலம் ஸ்ரீ தாண்டவராயசுவாமிகள் " தமிழில் மொழி பெயர்த்து "கைவல்ய நவனீதம்" என்று பெயரிட்டார். இதில் 288 செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. இந் நூல் தத்துவ விளக்கப்படலம், சந்தேகம் தெளிபடலம், என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியில் 101 பாடல்களும் பின்பகுதியில் 180 பாடல்களும் பாயிரமாக ஏழு பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர் என்றாலும் ஸ்ரீ கோவிலூர் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் இயற்றிய "தத்துவார்த்த தீபம்" என்ற உரை நூலே சிறந்ததாகப் போற்றப்படுகின்றது.

10. விவேக சூடாமணி

இது ஆதிசங்கரபகவத்பாதரால் இயற்றப்பட்டதாகும். இதனைத் தமிழில் பலரும் மொழிபெயர்த்துள்ளனர். என்றாலும்

திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்த நூலே கோவிலூர் மடத்தில் போதிக்கப்பட்டு வருகின்றது.

11. அஞ்ஞவதைப் பரணி

இது தத்துவராய சுவாமிகளின் அடங்கன் முறையில் இடம் பெற்றுள்ளதாகும். போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனுக்கே பரணிபாடுதல் மரபு, என்றாலும், சீடர்களின் அஞ்ஞானத்தை யானையாக உருவதித்து ஆயிரக்கணக்கான சீடர்களின் அஞ்ஞானமாகிய யானைகளை வென்றத் தனது குருபிரானின் மீது தத்துவராய சுவாமிகள் பரணி இலக்கியம் பாடியுள்ளார். இந்நூல் தத்துவக்கருத்தை உள்ளடக்கிய கற்பனைக்கதையாகப் படைக்கப்பெற்றுள்ளது. இடையிடையே வேதாந்தக் கருத்துக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அஞ்ஞானத்தை ஒரு அரசனாகவும் அகங்காரம் முதலியன அவனுக்குச் சேனைகளாகவும் அவர்களை ஞானம் என்கின்ற அரசன் அழிப்பதாகவும் புனைந்து பாடப்பட்டுள்ளது. இது 493 தாழிசைகளைக் கொண்டதாகும். இதன் பாட்டுடைத் தலைவர் இவருடைய ஆசிரியரான சொரூபானந்தர் ஆவார்.

12. பஞ்ச தசீ

இது ஸ்ரீவித்யாரண்ய சுவாமிகளால் இயற்றப்பட்டதாகும். 1. சித்திர தீபம், 2. திருப்தி தீபம், 3. கூடஸ்த தீபம், 4. தியான தீபம் 5. நாடக தீபம், 6. தத்துவ விவேகம், 7. பஞ்சபூத விவேகம், 8. பஞ்ச கோச விவேகம், 9. துவித விவேகம், 10. மகாவாக்கிய விவேகம், 11. யோகானந்தம், 12. ஆத்மானந்தம், 13. அத்துவிதானந்தம், 14. வரபானந்தம், 15. விஷயானந்தம் ஆகிய பதினைந்து தலைப்புகளில் ஞானம் பேசப்படுகின்றது. இதில் வேதாந்த விஷயத்தில் சீடனுக்குத் தோன்றும் சந்தேகங்கள் கேள்விகளாக கேட்கப்பட்டு அதற்குரிய பதில்கள் தரப்பட்டுள்ளன. இவ்வகையில் 605 சந்தேகங்கள் எழுப்பப்பட்டு அதற்குரிய விடைகள் காணப்பட்டுள்ளன. கோவிலூர் மடாலயத்தில் நித்தயானந்த சுவாமிகள் வீர சுப்பையாசுவாமிகள் ஆகியோர் மொழிபெயர்த்த பஞ்சதசீ நூல் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

13(அ). ஈசுவர கீதை

வேதாந்த பாடத்தின் வரிசையில் பதிமூன்றாவதாகத் திகழ்வது ஈசுவரகீதையாகும். இது பதினெண்புராணங்களில் இரண்டாவதாக விளங்கும் கூர்மபுராணத்தின் இடையில் அமைந்துள்ளது. இப்புராணம் நான்கு பகுதிகள் கொண்டது. இவை (ப்ராஹ்மீ, பகவதீ, கௌரீ, வைஷ்ணவீ என்று பெயர் பெறுகின்றன. இவற்றில் முதலாவதான ப்ராஹ்மீ சம்ஹிதை பூர்வார்த்தம், உத்தரார்த்தம் என்ற இரண்டு பகுதிகளையும் 5567 சுலோகங்களையும் உடையதாதும் இதில் உத்தரார்த்தத்தில் 11 அத்தியாயங்களைக் கொண்டதாக ஈசுவரகீதை விளங்குகின்றது. இதில் 495 சுலோகங்கள் இடம் பெற்றுள்ளன. இது ஈசுவரன் நாராயணனுக்கு உரைத்ததாக உள்ளது.

வடமொழியில் உள்ள இந்த நூலினை ஸ்ரீதத்துவராய சுவாமிகள் 338 செய்யுள்களால் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஸ்ரீதத்துவராய சுவாமிகள் இந்நூலுக்குச் **'சிவப்பிரகாசம்'** என்ற பெயரினை வரைந்துள்ளார்கள். இதற்குப் பல உரை நூல்கள் வெளிவந்துள்ளன.

13(ஆ). பிரம்மகீதை

ஈசுவரகீதையை மொழிபெயர்த்த தத்துவராய சுவாமிகளே இதனையும் மொழிபெயர்த்துள்ளார். வடமொழியில் உள்ள சூத சங்கிதை யக்ஞ வைபவ காண்டம் உபரி பாகத்தில் 12 அத்தியாயங்களில் பன்னிரண்டு உபநிடதங்களின் பொருளைக் கூறுவதாய் இது அமைந்துள்ளது. இதனைப் பனிரிரண்டு அத்தியாயங்களும் 547 பாடல்களும் கொண்டதாகத் தத்துவராய சுவாமிகள் பாடியுள்ளார். இதற்கத் தத்துவராயர் சூட்டியுள்ள பெயர் **"சொரூபானந்த சித்தி"** என்பதாகும்.

13(இ). பகவத்கீதை (அ) ஹரிகீதை

இது மகாபாரதத்தின் இறுதிப்பகுதியில் உள்ள யுத்த பருவத்தில் உள்ளதாகும். இதனைப் பலரும் பல்வேறு மொழிகளில் பெயர்த்துள்ளனர். இது குருஷேத்திர யுத்தத்தின் ஆரம்பத்தில் போர்க்களத்தின் மத்தியில் மனம்கலங்கி நின்ற அர்ச்சுனனுக்குப் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசித்ததாகும். இது 18 பகுதிகளை

உடையது. இவை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று வழங்கப்பெறும். இதனைப் பட்டனார் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

14. ஞான வாசிட்டம்

இது வசிட்டரால் ஸ்ரீராமபிரானுக்கு ஞானம் பெருகும் பொருட்டு உபதேசிக்கப்பெற்றதாகும். இது வடமொழியில் அமைந்த இராமாயணத்தில் ஒரு லட்சம் சுலோகங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது என்பர். காஷ்மீரதேசத்து ஸ்ரீஅபிநந்த பண்டிதர் என்பர் இதனைச் சுருக்கி 6000 சுலோகத்தில் **"லகுயோக வாசிட்டம்"** என்ற நூலாக்கினார். இந்த ஆறாயிரம் சுலோகங்களையும் தமிழில் ஆறுபகுதிகளும். முப்பத்தேழு கதைகளும் கொண்ட 2055 பல்வகை விருத்தப் பாடல்களால் வீரை ஆளவந்தார் முனிவர் என்பவர் மொழி பெயர்த்துள்ளார்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு நூலக்குக் கோவிலூர் மடாலயம் ஸ்ரீ துறவாண்டவரின் மாணவராகிய ஸ்ரீநித்யானந்த சுவாமிகள் **"சம்சாரதாரணி"** என்ற பேருரையைமொழிபெயர்த்து இணைத்துள்ளனர். இந்த உரையுடன் ஸ்ரீவாசிஷ்ட சந்திரிகை, ஸ்ரீவாசிஷ்டதாத்பரியப் பிரகாசம் முதலியவற்றுடன் இணைந்த ஸ்ரீவீரசேகரம் எனும் உரையை வீரசேகர ஸ்ரீசுப்பையதேசிக சுவாமிகள் தொகுத்துள்ளார். இதுவே இப்பொழுதுள்ளவற்றுள் மிகப்பெரிய பதிப்பாகும். இது சென்னை வேப்பேரி ஆனந்தாசிரமத்தின் வெளியீடாக 1928 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் மடாலயம்
காரைக்குடி அருகில்
கோவிலூர் – 630 307
போன்: 04565 – 436846

சுவாமி தயானந்த ஆசிரமம் அருகில்,
புரானி ஜாடி, ரிஷிகேஷ்–24920
உத்திரபிரதேசம், இந்தியா
போன்: 0135 – 436968

கோவிலூர் மடாலயம்
34–36, குப்பையா செட்டி தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33
போன்: 044 – 371 6507

கலாக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்
84, கலாக்ஷேத்ரா ரோடு,
திருவான்மியூர், சென்னை–41
போன்: 044 – 491 1390